## அரச சேவை சேமலாப நிதியம் - 2021

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை.இவ்வறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிட்டிருந்த முக்கிய விடயங்களின் தாக்கத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையில் 1.5 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாகக் காணப்படுவதுடன், முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பரிசோதனை செய்யும் பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்ல வேண்டும்.
முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையா- கவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- நிதியம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மற்றும் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் விசேட அதிகாரத்திற்கிணங்க கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்பட்டது எனவும் பிரயோகிக்கக்கூடிய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுமதிப்பதற்கும் அவசியமாக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததும் எனவும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது விசேட அங்கீகாரத்திற்கு இணங்க மாத்திரம் சொத்துக்களை அணுகுவதை அனுமதிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ளவாறான சொத்துக்களுடன் நியாயமான இடைவெளிகளில் மற்றும் பொருத்தமான நடவடிக்கை ஏனைய வேறுபாடுகளுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டும் என்பவற்றையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்கீட்டு போதியளவு கட்டுப்பாடுகளிற்கு “திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு” என்ற மு- றைமையொன்று நிறுவகத்திற்கு தேவைப்படுகின்றது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை. | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நியம இலக்கம் 01 இன் பிரகாரம் அனைத்து வருமானம், செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், வருடத்தில் பெறப்பட்டிருந்த ரூபா 378,828,149 ஆன கட்டாய பங்களிப்புத் தொகை, காசு அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்தது. | விடை அளிக்கப்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்குக் குறிப்பு 3.8 இன் பிரகாரம் அட்டுறு செலவுகள் ரூபா 14,904,137 என்பதுடன் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 14,554,137 ஆக காட்டப்பட்டமையால் செலவுகள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 350,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | விடை அளிக்கப்படவில்லை. | அட்டுறு செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 1,055,000 ஆக இருக்க வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,153,760 ஆக காட்டப்பட்டிருந்தமையால் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 98,760 அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | வருடாந்தம் அட்டுறு அடிப்படையில் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் கணக்கீடு செய்யப்படுவதுடன் பற்றுச்சீட்டுப் பெறுவனவுகள் தாமதமாவதால் இவ்வாறு கணக்காய்வுக் கட்டணம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுவதற்கு ஏற்பட்டிருந்தது. | அட்டுறு செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நிதியம் ஆரம்பிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை, மீளாய்வாண்டில் | 79,645,894,971 | தனிப்பட்ட மீதிகள் அட்டவணை | நிதியத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை உறுதிப்படுத்துவதற்கு முன்பிலிருந்து | பங்களிப் பாளரின் தனிப்பட்ட கணக்குகள் தொடர்பாக |

புதிதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை, இறுதித் திகதியில் நிதியத்தின் உறுப்பினர் எண்ணிக்கை எவ்வளவு என்று உறுதிப்படுத்துவதற்கு உறுப்பினர் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால் 2021 திசெம்பர் 31 இல் கட்டாயப் பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 31,284,678,563 சுயேச்சை பங்களிப்புத் தொகை கணக்கின் மீதி ரூபா 48,191,933 மற்றும் அரச பங்களிப்புத் தொகை கணக்கின் மீதி ரூபா 48,313,024,475 ஆன மீதிகள் பங்களிப்பாளர்களின் உரிமையின் பிரகாரம் தனித்தனியாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தது.

காணப்பட்டு வருகின்ற நிதி அறிக்கைகள் இறுதிக் கணக்குகளின் மீதிகள் பயன்படுத்தப் படுகின்றது. 2017 ஆம் வருடத்திலிருந்து அறிமுகப்படுத்தப் பட்ட நிகழ்நிலை முறைமை மூலம் இலக்கங்களைப் பெற்றுக்கொண்ட உறுப்பினர்கள் நிதியத்தில் சேர்க்கப்பட்ட புதிய உறுப்பினர்களாக கருதப்படுவதுடன் வருடந்தோறும் செலுத்தப்பட்டிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை நீக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையாக கருதப்பட்டு வருடத்தின் ஆரம்ப மீதியில் வருடத்தில் பெறுவனவுகளில் கொடுப்பனவுகள் கழிக்கப்பட்டு கட்டாய பங்களிப்புத் தொகைக் கணக்கில், சுயேச்சை பங்களிப்புத்தொகை கணக்கில் மற்றும் அரச ஊக்குவிப்புத் தொகைக் கணக்கு மீதி கணக்கிடப்படும். இம் மீதி உறுதிப்படுத்தப்படுவ தற்கு தனிப்பட்ட கணக்குகள் பேணப்படுவது அவசியம் என்பதுடன் அதற்காக தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு ள்ள முறைமை முறையாக நடாத்திச் செல்லப்படுவது அவசியமாகும். அரச சேவை

முறையான தரவு முறைமை யொன்று பேணப்பட்டு வருவதன் மூலம் மீதிகளின் சரியான தன்மையை உறுதிப் படுத்தல் வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதியத்திற்கு மாதாந்தம் பெறப்படுகின்ற 500-1000 வரையான காசோலைகள் மற்றும் 1000 இற்கும் அதிகமான உறுப்பினர் எண்ணிக்கையின் தகவல்கள் கணக்கீடு செய்யப்படுதல் கடினமானது என்பதை தெரிவிக்கின்றேன். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் ரூபா 85,016,374 ஆனது அரச பங்களிப்புத் தொகையாக செலுத்தப்பட்டிருந் ததுடன் அக் கொடுப்பனவிற்கு உட்பட்ட பயனாளிகளிட மிருந்து நிதியத்திற்கு உண்மையில் பங்களிப்புப் பணம் பெறப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தாது சேவையாற்றும் நிறுவனங்களின் உறுதிப்பாட்டின் அடிப்படையில் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டி ருந்தன. | 85,016,374 | தனிப்பட்ட மீதிகள் அட்டவணை | அரச பங்களிப்புப் பணக் கொடுப்பனவு காசோலைகளின் விபரம் நிகழ்நிலை முறைமையில் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் அவ்வாறு அனுப்பாத நிறுவனங்களுக்கு தொடர்ந்தும் விழிப்புணர்வு அளிக்கப்பட்டு வருகின்றது. தற்போது இருக்கின்ற குறைந்தளவு ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வளங்களைப் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணனிகளின் எண்ணிக்கை) பயன்படுத்தி அரச சேவை நிதியத்திற்கு மாதாந்தம் பெறப்படுகின்ற 500-1000 வரையான காசோலைகள் மற்றும் 1000 இற்கும் அதிகமான உறுப்பினர் எண்ணிக்கையின் தகவல்கள் கணக்கீடு செய்யப்படுதல் கடினமானது என்பதை தெரிவிக்கின்றேன். | பங்களிப் பாளாரின் தனிப்பட்ட கணக்குகள் தொடர்பாக முறையான தரவு முறைமை யொன்று பேணப்பட்டு வருவதன் மூலம் மீதிகளின் சரியான தன்மையை உறுதிப் படுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | மாதாந்தக் கணக்குப் பொழிப்புக்களின் மூலம் அல்லது பல்வேறு அரச நிறுவனங்களினால் நிதியத்தின் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவு மற்றும் செலவு வைத்தல்கள் தொடர்பாக இனங்காணப்படாத மீதிகளை தீர்க்கப்படும் வரை சீராக்கல் கணக்கொன்றில் பதியப்பட்டிருந்தது. இதன்படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இனங்காணப்படாத சீராக்கல் கணக்கில் காணப்படும் பல வருட காலம் முதல் சேகரமாகி வரும் மீதி ரூபா 29,811,315 தொகையாக இருந்தது. அம் மீதிகள் உரவாக்கப்பட்ட முறைகள் தொடர்பாக விரிவான அட்டவணை ஒன்று சமர்ப்பிக்கப் படாமையால் அந்த மீதி தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தல் மேற்கொள்ள முடியாதிருந்தது. | 29,811,315 | அட்டவணைகள் | சீராக்கல் கணக்கின் ஆரம்ப மீதியான ரூபா 29,811,315 ஐ உறுதிப்படுத்துவதற் கான நிதியத்தினால் பேணப்பட்டு வருகின்ற அட்டவணைகளில் பல வருடங்களுக்கு முன்பிருந்தே பெறுமதியொன்று காட்டப்பட்டு வந்துள்ளதுடன் அது எமது சீராக்கல் கணக்கின் மீதியுடன் இணங்கவில்லை. எதிர்காலத்தில் முகாமைத்துவக் குழுவின் மூலம் இத்தவறு வரவு வைத்து நீக்கப்படுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். | மீதிகள் இனங்காணப் பட்டு தீர்க்கப்படல் வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,570,594,169 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,627,899,989 தொகையாக காணப்பட்டது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 1,057,305,820 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு முதலீடுகளில் இருந்து வட்டி வருமானம் ரூபா 1,057,068,327 இனால் குறைவடைந்திருந்தமை முக்கிய காரணமாக இருக்கிறது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் உறுப்பினர்களினால் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2021 சனவரி 01 இல் காணப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 987 ஆக இருந்ததுடன், 2021 ஆம் வருடத்திற்காக பெறப்பட்டிருந்த விண்ணப்பங்கள் 5059 உம் சேர்த்து 6046 விண்ணப்பங்களில் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 வரையில் 1363 விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2020 ஆம் வருடத்துடன் ஒப்பிடும் போது அதிகரிப்பதற்கு COVID 19 தொற்று நோய் நிலை காரணமாக உத்தியோகத்தர்கள் அவ்வப் போது சுழற்சி முறையில் கடமைக்கு அழைக்கப்பட்டமை. போக்குவரத்து பிரச்சினை காரணமாக உத்தியோகத்தர்கள் வரவு குறைவடைந்தமை, குறைபாடுகள் கோரப்பட்டு கடிதங்கள் அனுப்பட்டிருந்த 3 மாதங்களுக்கு குறைவான விண்ணப்பங்களும் இந்த எண்ணிக்கையில் அடங்குகின்றமை மற்றும் குறிப்பிட்ட பதில் கடிதங்கள் பெறப்படும் வரை கொடுப்பனவுக்கு முடியாதிருந்தமை பொலிஸ் விண்ணப்பங்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு விண்ணப்பங்கள் ஒரே நேரத்தில் பிரிவிற்கு பெறப்பட்டமை.<br>பொலிஸ் உப சேவையை வழமையான சேவைக்கு உள்வாங்கல் 2005 இல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஓய்வூதியம் பெற்றுச் செல்லல் 2015.04.23 இடம் பெற்று அரச சேவை சேமலாப நிதியத்தின் உறுப்புரிமை அத்தினத்தில் இரத்துச் செய்யப்பட்டிருந்தும் அரச சேவை சேமலாப நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு பெருமளவு கால தாமதமொன்றுடன் பெருமளவு எண்ணிக்கையிலான விண்ணங்கள்கள் ஒரே நேரத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கபட்டிருந்தமை காரணமாக இருந்தது | விண்ணப்பங்களுக்காக தாமதம் இன்றி கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |